**மேல்மாகாணக் கல்வித்திணைக்களம்**

**ஆண்டு இறுதி மதிப்பீடு - 2019**

**புள்ளித்திட்டம்**

# இலக்கிய நயம்

**தரம் - 10**

(1) 1) (அ) உவமையணி – உவமானம்-வானம் உவமேயம்- மனோபாவம் விரிவடைவது
பொதுத்தன்மை- பரந்து காணப்படல்

(ஆ) சுயநலக் கொள்கையாகிய ஒருவித இருளிலிருந்து விடுபட்டு எல்லோருக்கும் எல்லாம் பெற வேண்டும் என்ற பொதுவுடமைக் கொள்கைக்கு மாறுவது)

2) அ) கவிக்கோ அல்லது கவிக்கோ அப்துர்ரஹுமான்

ஆ) தாகத்திற்குப் பானம், பசிக்கு உணவு , உடுக்க உடை , நோய்க்கு மருந்து, சுவாசத்திற்காக காற்றை சலித்துக் கொடுத்தல், மழை , வசிக்க வீடு , பயணத்திற்கு சக்கரம் கோடரிக்காம்பு (ஏதாவது ஒன்று)

3) அ) தாய்ப் பசு

ஆ) காளைமாட்டுக்கு மஞ்சு விரட்டு ஞாபகம் வந்து பசுவை எட்டிப்பார்த்த போது அது கண்ணீ வுடித்துக் கொண்டிருப்பதைப்பார்த்து பொறுக்க முடியாமல் மாடசாமியின் மகனைத் தாக்கப் புாய்ந்த சந்தா்ப்பத்தில்

4) அ) நட்சத்திரங்கள் நிறைந்திருக்கும் ஆகாயம் அந்த நட்சத்திரங்கள் மறைந்து போனபின் எவ்வாறு அழகிழந்து விளங்குமோ அவ்வாறு பொழிவற்று விளங்கியது.

ஆ) கிட்கிந்தை மலைக்கு இலக்குமணன் வருவதைக்கண்டு வானரங்கள் எவ்வாறு பயந்து மலைப்பகுதிக்குள் இருக்கும் காட்டுக்குள் சென்று மறைந்து கொண்டன என்பதைக் காட்டுகிறாா் உவமையணியைக் கையாண்டுள்ளாா்.

5) அ) தோட்டத் தொழிலாளர் தாம் வேலை மீதுள்ள விருப்பம் அல்லது வாஞ்சை எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆ) வெண்டிக்காய் போன்ற எமது அழகான விரல்கள் குளிரினாலும் பனியினால் விறைத்து விட்டாலும் எமது உடல் குளிரில் நடுங்கினாலும் வேலைக்கு சுறுசுறுப்பாக செல்வதில் முன்நிற்போம் . உறுதி கொள்வோம் என உவமையணி முலம் காட்டியுள்ளாா்.
உவமானம் - வெண்டிக்காய் உவமேயம் -விரல் பொதுத் தன்மை -நீண்ட மெல்லிய அமைப்பு

(2) அ) தேனை உண்ணும் இயல்புடைய வண்டுகள் மலா்களில் உள்ள தேனை உண்டு மயங்கிக் கிடந்தன.அவற்றை ஒரு மங்கை கண்டு நாவல் பழங்கள் என நினைத்து அவற்றில் ஒன்றை எடுத்து தன் பெரிய கையில் வைத்துப் பாா்த்தாள்.

ஆ) "….வண்டு மது தனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு…"

" வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி…
மலா்க்கரம் குவிமென்றஞ்சிப் போனது வண்டோ…"
(மேலும் பொருத்தமான வரிகள் இருப்பபதாகக் கருதினால் சோ்க்கலாம்)

இ) தாமரை சூரியனைக் கண்டால் மலரும் சந்திரனைக்கண்டால் கூம்பும். அதாவது காலையில் மலா்நது மாலையில்மலரும்.

ஈ) தலைவி எடுத்தது நாவற் பழம் ஆனால் பறந்தது ஒரு வண்டு. (நாவற் பழம் ஏவ்வாறு பறப்பது ? எவ்வாறு வண்டானது ? )

உ) 1.மயங்கி 2. நாவற் பழம் 3. கூறினார் 4. நிலவு அல்லது சந்திரன்
5. மலர்ப் போன்ற கை

(3) அ) அஃதிலார் என்பு போர்த்த உடம்பு

ஆ) உவமையணி .- அன்பு இலாதார் வாழ்க்கை பாலைவனத்திலுள்ள பட்ட மரம் போன்றது.

உவமானம் - பாலைவனத்திலுள்ள பட்டமரம்

உவமேயம் - அன்பு இல்லாதார் வாழ்க்கை

பொதுத்தன்மை – யாருக்கும் பயனின்மை

இ) உரிமைக்கும் கடமைக்குமிடையிலான ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவதாகும்.

ஆன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார் என்பு போர்த்த உடம்பு எனும் குறள் மூலம்

ஈ) உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதப்படும்

ஒ) இல்வாழ்க்கை – மக்கட்பேறு

தேசபக்தி என்றமைந்த அன்பு நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்க்க உதவியது

(4) அ)

- ✓ தன்பார்வையில் மரங்கள் மனிதனுக்கு உதவுவதையும் மனிதன் நன்றி கெட்டவனாக இருப்பதையும் உதாரணம் மூலம் காட்டல்
- ✓ சாலையில் நடக்கிறேன்….. எனும் அனுபவப் பகிர்வின் மூலம் ஏனையோரையும் அனுபவிக்கச் செய்தல்
- ✓ பூச்சொரிந்து வரவேற்றல், வெயிலுக்குக்குடையாதல் போன்ற சொற்றொடர்கள்
- ✓ குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி ….. தங்களை முற்றிலும் அரப்பணம் செய்யும் மரங்கள் எனும் சொற்றொடர்கள் (பந்தி பூரணப்படுத்தப்படல் வேண்டும்)
- ✓ மனிதனுக்கு மரம் இன்றி வாழ முடியாது ஆயினும் மரம் மனிதனிடம் இருந்து எதையும் எதிர்பார்க்க வில்லை எனும் கூற்றுகள்
- ✓ மரம் முழுமையாக மனிதனுக்கு உதவுபவை, மனிதன் மரத்திற்கு என்ன செய்கிறது.?
- ✓ மனிதன் மரம் செய்யும் உதவிக்கு மாறாக மரத்தை அழிக்கிறான் ஒரு மரத்தையேனும் நடமாட்டான். (ஐந்தாவது குறிப்பிடுதல் வேண்டும்)

(8 புள்ளிகள்)

ஆ)

கன்பூசியஸ் மரணப்படுக்கையில் இருந்த போது அவரது சீடர்கள் ‘குருவே கடைசியாக எங்களுக்க ஏதாவது அறிவுரை கூறுங்கள்’ என்றார்கள். உடனே அவர் தனது வாயைத்திறந்து காட்டி என்ன தெரிகிறது? என்றார். நாக்கு தெரிகிறது ̇என்றனர். பற்கள் தெரிகின்றதா என்று கேட்க இல்லை என்றனர் உடனே தனது கடைசி அறிவுரையை வழங்கினார்.

நாக்கு நான் பிறக்கும் போதே இருந்தது. பல் பிறகு முளைத்தது. பல் வலிமையாக இருந்தாலும் வயது முதிர முதிர விழுந்து விட்டன. நாக்கு மென்மையாக இருந்தாலும் இன்னும் நான் சாகும் வரை என்னோடு இருக்கிறது.

இதிலிருந்து மென்மை நீண்ட நாள் வாழும் எனவும் வலிமையானவை சீக்கிரம் அழிந்து விடும் எனவும் கூறினார்.

(7புள்ளிகள்)

(15புள்ளிகள்)

(5) அ) வாய்மொழிப்பாடல்களில் ஒரு வகையாகும் (4 புள்ளிகள்)

ஆ) வைத்தியர்களும் வைத்தியசாலைகளும் செல்வாக்குப் பெற்றிராத கிராமங்களில் மருத்துவிச்சியே பிரசவ சிகிச்சைகளை மேற்கொண்டாள். குழந்தை பெற உதவி செய்து தாயைப் பாதுகாத்து குழந்தையையும் பாதுகாத்தாள். (6 புள்ளிகள்)

இ) பிரசவம் பார்த்த மருத்துவிச்சி குழந்தை பிறந்தவுடன் குழந்தையைக் கையில் எடுத்து தூக்கியவாறு குழந்தையையும் பெற்றோரையும் சுற்றத்தாரையும் வாழ்த்திப்பாடுவாள். (5 புள்ளிகள்)

(6)

அ)

- ✓ இராமனுடன் சீதையைத் தேடித்தருவோம் என்று கூறிய சொல்லை மறந்து அந்தப்புறத்தில் கேலிக்கைகளிலும் மது மயக்கத்திலும் கிடத்தல்.
- ✓ மழைகாலம் முடிந்து சீதையைத் தேடும் பணியில் ஈடுபடுவதாகக் கூறியவன் நான்கு மாதம் கடந்தும் வராமை
- ✓ இராமன் செய்த உதவியை மறந்து என்ன செய்கிறான் செயந்நன்றி மறப்பவனா என சுக்ரீவனை இராமன் வினவ வைத்தமை
- ✓ யாவராலும் பெறமுடியாத அரிய செல்வத்தையும் நீண்டகாலம் பிரிந்திருந்த மனைவியையும் நம் உதவியால் பெற்றமையை மறந்து விட்டானா?
- ✓ செய்ந்நன்றி மறந்ததால் சீர்மையின் தீர்ந்தனன் (மேன்மைத்தன்மையில் இருந்து நீங்கிவிட்டான்)
- ✓ உதவி என்பது அறம் அறத்தை மறந்ததால் அறம் மறந்தனன் போன்ற சொற்களால் இராமன் அழைக்கலாதல்.
- ✓ நமது பேராற்றலைக்கூட அறியவில்லையே என இராமன் கூறல்.

(ஐந்து விடயங்களாவது முழுமையாக வளர்க்கப்படுதல் வேண்டும்) (8 புள்ளிகள்)

ஆ) ‘‘வானரங்கள் வெருவி மலைஒரீஇ
கான் ஒருங்குபடர’’

கிட்கிந்தை மலைவாழ் குரங்கினங்கள் இலக்குமனனின் வருகையைக் கண்டு அஞ்சிப்பயந்து கிட்கிந்தை மலையை விட்டு நீங்கி எல்லாம் ஒன்று சோ்ந்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டன. இவ்வாறு குரங்குகள் கிட்கிந்தை மலையில் இல்லாத போது மலையின் பொலிவற்ற நிலை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

‘‘ மீன் நெருங்கிய வானகம் மீன் எலாம்
போனபின் பொலிவற்றது போன்றதே. ‘‘

இவ்வாறு குரங்குகள் எல்லாம் கிட்கிந்தை மலையை விட்டு தூரத்திற்குச் சென்றுச் சென்று ஒளித்துக் கொண்டன. இந்நிலை கரிய மேகம் போன்ற கிட்கிந்தை மலையானது நட்சத்திரங்கள் நெருங்கியிருந்த கரிய மேகத்தில்அந்த நட்சத்திரங்கள் எல்லாம் மறைநது போனபின் எவ்வாறு அழகற்று விள்ஙகுமோ அவ்வாறு பொலிவற்று விளங்கியது.

இங்கு உவமையணி கையாளப்பட்டுள்ளது. (அணி விளக்கப்பட வேண்டும்.)
(7புள்ளிகள்)

(15 புள்ளிகள்)

(7)

- ✓ ‘‘அவனது வீட்டுக்கு எதிரே புகைப்படப்பிடிப்பு நிலையம் ஒன்று உள்ளது. அவர்களது பௌடரையும் ஒல்லாந்தர்காலத்துச் சீப்பையும் பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை’’
- ✓ நேற்று வாங்கிய மணச்சவர்க்காரத்தைக் காணவில்லை ஒருவேளை எலிசாவுக்கு கொண்டுபோய்ச் சேர்த்ததோ.
- ✓ முதல் நாள் இரவு அவனது காலில் எலி கீறியதால் அவனுக்கு எலி மாபெரும் எதிரியானது இதனால் எலிக்கும் அவனுக்கும் யுத்தப்பிரகடனம் எனக் குறிப்பிடல்
- ✓ பழைய மூன்று கார்கள் தீ வைத்துக் கொழுத்தியிருப்பதைப் பார்த்து எமது நாடு இறக்குமதி செய்த முதல் மூன்று காரும் எனக் கூறல்.

- ✓ பலகிரகங்களிலும் சாதனைபடைத்தோரின் தொழில்நுட்பத்தால் செய்த இந்த எலிப்பொறிமுன்னால் இந்த எலிகள் எம்மாத்திரம்
- ✓ ‘‘வாய்திறந்து பார்த்திருக்கும் முதலை போல எலிப்பொறி என நையாண்டி செய்தல்’’
- ✓ தான் சொல்வதை லோரன்ஸ் கவனிக்கிறானா அல்லது கோழியின் பித்தப்பை அகற்றுவதில் கண்ணும் கருத்துமா இருக்கின்றானா ?
- ✓ கர்ணனுக்குக் கடைத்த நாகஸ்திரம் போல இந்த எலிப்பொறி எனல்
- ✓ எலி கடித்த சட்டையைப் பார்த்து அவுஸ்திரேலியாக் கண்டத்தை ஞாபகப்படுத்தியதாகக் கூறல்.
- ✓ சவரம் செய்யாத முகத்துடன் கடையில் எலிப்பாசாணம் கேட்ட போது ‘‘ எலிக்குத்தானே’’ என ஒரு அபத்தமான கேள்வியைக் கடைக்காரன் வினவல்
- ✓ கறிச்சட்டியில் இருந்தவைகளைக் காலிபண்ணிய திருப்தியில் இவனை நிமிர்ந்து பார்த்து ‘மியாவ்’ என்றது சனியன்
- ✓ எலியெல்லாம் சைவத்தைத் தழுவிவிட்டனவா?
- ✓ எலிகளை அழிப்பது என்ற எண்ணத்தை விட எலிகளில் இருந்து தன்னை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது எனும் பயமே மேலோங்கியிருந்தமை
  (சந்தர்ப்பங்களுடன் பத்து விடயங்களாவது விளக்கப்பட வேண்டும்)

(15 புள்ளிகள்)